
# பக்தி நெறியும் பண்பாட்டுக் கோலங்களும்



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

ANNUAL VERIFICATION B & P
YEAR | SIGNATURE
2018
2019
2020
2021



# பக்தி நெறியும் பண்பாட்டுக் கோலங்களும்

ARCHIVES

230
PAK

பதிப்பாசிரியர்

க. இரகுபரன்

UNIVERSITY OF JAFFNA LIBRARY
AR

186146

186146

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

2008

186146

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பக்தி நெறியும் பண்பாட்டுக் கோலங்களும் |
| பதிப்பாசிரியர் | : | க. இரகுபரன் |
| முதற்பதிப்பு | : | 2008 |
| வெளியீடு | : | இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம். 248,1/1, காலி வீதி, கொழும்பு – 04. |
| அச்சுப்பதிப்பு | : | யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட் இல. 48B, புளூமெண்டல் வீதி, கொழும்பு – 13. தொ.பே. 2330195. |
| பக்கங்கள் | : | XXIV + 444 |
| பிரதிகள் | : | 1000 |
| அளவு | : | 1/8 |
| கடதாசி | : | 80 கிராம் வெள்ளைத்தாள் |
| விலை | : | 500/- |

| | | |
|---|---|---|
| Title | : | Bakthi Neriyum Panpaatuk Kolangalum |
| Editor | : | K. Raguparan |
| First Edition | : | 2008 |
| Published by | : | Dept. of Hindu Religious & Cultural Affairs 248 1/1, Galle Road, Colombo - 04. |
| Printers | : | Unie Arts (Pvt) Ltd 48B, Bloemendhal Rd, Colombo - 13. T.P : 2330195 |
| No.of Pages | : | XXIV + 444 |
| No.of Copies | : | 1000 |
| Size | : | 1/8 |
| Paper Used | : | 80 Gsm Bank Paper |
| Price | : | 500/= |

# திருமுறைகளில் சைவ சித்தாந்த சிந்தனைகள்

## - அடங்கன் முறையையும் திருவாசகத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு நோக்கு.

ச. முகுந்தன்

### கட்டுரையின் நோக்கம்

**சை**வசித்தாந்தமானது சோழப் பேரரசர் காலத்திலிருந்தே மெய்கண்ட சந்தான பரம்பரையினரால் பெருந்தத்துவக் கோட்பாடாக உருவாக்கப்பட்டது எனக் கூறப்படினும் சைவ சித்தாந்தம் தொடர்பான சிந்தனை வீச்சுக்கள் வட இந்தியாவிலும் தென்னிந்திய மரபிலும் இதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே முகிழ்ந்து விட்டன என்பதே தத்துவ வரலாற்று உண்மையாகும்.

வட இந்திய வரலாற்றில் யசுர் வேதம் (தைத்திரிய சங்கிதை), சுவேதாஸ்வர உபநிடதம், மகா புராணங்களுள் சிவ புராணம் (கைலாச சங்கிதை, கோடிருத்திர சங்கிதை), ரௌரவம் போன்ற சிவாகமங்களின் ஞான பாதம் எனத் தொடங்கி அட்டபிரகரண நூல்கள் வரை இப்போக்கினை அடையாளங் காணமுடியும்.

தென்னாட்டில் சங்க இலக்கியங்கள், மணிமேகலை (சமயக்கணக்கர் திறங் கேட்ட காதை – சைவவாதி), காரைக்கால் அம்மையாரின் பிரபந்தங்கள், திருமந்திரம், மூவர் தேவாரங்கள், திருவாசகம், ஞானாமிர்தம் என நீண்ட பின்னணியில் சைவ சித்தாந்தத்தின் கருத்தியல் மூலங்களை அடையாளங் காணமுடியும்.

இந்த வகையில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய தேவாரமுதலிகளின் பாசுரங்களிலும் மணிவாசகரின் திருவாசகத்திலும் விரவிக் கிடக்கின்ற சைவ சித்தாந்த சிந்தனைகளை அடையாளங் காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## முப்பொருள் உண்மை

திரிபதார்த்த நிச்சயம் என்னும் வகையில் பதி, பசு, பாசம் ஆகிய முப் பொருள் உண்மையினைச் சாதிப்பதும், தர்க்க ரீதியாக அதனை நிரூபித்தலுமே சைவ சித்தாந்த கோட்பாட்டின் அடிப்படை எனலாம். இதனையே

*"பல்கலைஆ கமவேதம் யாவையினும் கருத்துப்*
*பதி பசு பாசம் தெளிதல்......"* **(13)**

என்கிறது சிவப்பிரகாசம்.

*"பதி பசு பாசம் எனப் பகர் மூன்றின்*
*பதியினை போல் பசு பாசம் அநாதி"* **(115)**

என திருமந்திரமும் இதனை எடுத்துக் காட்டியுள்ளது. திரிபதார்த்த நிச்சயத்தை சாத்திர ரீதியாக மெய்கண்ட நூல்கள் சாதிப்பதற்கு வெகு காலத்திற்கு முன்பே தோத்திரப் பாடல்களின் தலைமகனாகப் போற்றப்படுகின்ற திருஞான சம்பந்தர் தனது தேவாரம் ஒன்றில்,

*"விளையாததோர் பரிசில்வரு பசு பாச வேதனை யொண்*
*தளையாயின தவிரவ்வருள் தலைவன்னது சார்பாம்"* **(121)**

என அடையாளங் காட்டியிருந்தமை இங்கே சுட்டிக் காட்டத் தக்கதாகும்.

## பதியின் சர்வ வியாபகம்

பதியின் சர்வ வியாபகத் தன்மையை சைவ சித்தாந்திகள் அகர உயிர் எழுத்தினை உதாரணம் காட்டி விளக்குவர். அகரமானது எல்லா எழுத்துக்களுக்கும் முதன்மையாக விளங்குவதுடன் மற்றைய எல்லா எழுத்துக்களுள்ளும் சூக்கும காரணியாகக் காணப்படுவது போல பதியும் பிரபஞ்சத்தில் சர்வ வியாபகமாயும் அதே வேளை சூக்குமமாயும் விளங்குகின்றது. இதனையே,

*"அக்கரங்கள் தோறும் சென்றிடும் இறைவன்"*

என அருணந்தி சிவாச்சாரியார் குறிப்பிடுவார்.

*"அகர உயிர் போல் அறிவாகி எங்கும்*
*நிகரில் இறை நிற்கும் நிறைந்து" (பதிமுதுநிலை – 1)*
என்கிறது திருவருட்பயன்.

இச் சித்தாந்தக் கருத்தமைவை

*"அகர முதலின் எழுத்தாகி நின்றான்"*
என சுந்தரமூர்த்தி நாயனார் வெளிப்படுத்தியுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

கொதிநீரிலே சூடு போல (எங்கும் எவையும் எரியுறு...) உலகிலே சர்வ வியாபியாக நிறைந்துள்ளவனும் அதே வேளை சூக்குமமாக உள்ளவனுமாகிய முதல்வனின் இவ்வியல்பினை,

*"உலகினை இறந்து நின்றது அரன்உரு என்பதோரார்*
*உலகவன் உருவில் தோன்றி ஓங்கிடும் என்றும்ஓரார்*
*உலகினுக் குயிருமாகி உலகுமாய் நின்றதோரார்*
*........................................................" (சிவஞான சித்தியார் : சுபக்கம்–68)*
என விளக்குகிறார் அருணந்தி சிவாச்சாரியார்.

முதல்வனின் இவ்வியல்பை நாயன்மார்களும் தமது அருட்பாசுரங்களில் பதிவு செய்துள்ளனர். அந்த வகையில்,

*"மண்ணும் புனலுயிரும் வரு காற்றும் சுடர் மூன்றும்*
*விண்ணும் முழுதானான்" (111)*
என சம்பந்தரும்,

*"விறகினில் தீயினன் பாலிற்படு நெய்போல்*
*மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்" (6121)*
என திருநாவுக்கரசரும் எடுத்துரைத்த முறைமைகள் நயக்கத் தக்கனவாகும்.

## ஒன்றாய் – வேறாய் – உடனாய் நிற்றல்

இறைவன் உயிர்களோடு கலப்பினால் ஒன்றாய் நிற்கிறான் – இதற்கு உடலும் உயிரும் போல் என மெய்கண்டார் உதாரணம் காட்டுவார். இறைவன் பொருட்டன்மையால் உயிர்களில் இருந்து வேறாகி நிற்கிறான். இதற்கு கண்ணொளியும் கதிரவனொளியும் என்கிற எடுத்துக்காட்டினை சித்தாந்திகள் கையாள்வர். உயிர்க்கு உயிராதல் தன்மையால் பதியானவர் உயிர்களுடன் உடனாய் நிற்கிறார். இதற்கு கண்ணுடைய ஒளியையும் ஆன்ம

போதத்தினையும் (உயிரின் அறிவு) சித்தாந்திகள் உதாரணம் காட்டுவர். அதாவது கண் ஒரு பொருளைக் காணுகின்ற பொழுது ஆன்மாவின் அறிவு உடன் சென்று அப்பொருளை இன்னதென அறிவிக்கின்றது.

உயிர்கள் நிலைத்தல், அறிதல், நுகர்தல் என்னும் மூன்று பயன்களையும் எய்துவதற்கு இறைவன் உயிர்களுடன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்பது இன்றியமையாதது என்பது சைவ சித்தாந்திகளின் நம்பிக்கையாகும். இதனையே,

*"ஈறாகி அங்கே முதல் ஒன்றாய் ஈங்கிரண்டாய்*
*மாறாத எண்வகையாய் மற்றவற்றின் – வேறாய்*
*உடனாய் இருக்கும் உருவுடைமை என்றும்*
*கடனாய் இருக்கின்றான் காண்" (திருக்களிற்றுப்படியார்–86)*

*"உலகெலாம் ஆகி வேறாய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி*
*அலகிலா உயிர்கள் கன்மத்து ஆணையின் அமர்ந்து செல்லத்*
*தலைவனாய் இவற்றின் தன்மை தனக் கெய்தல் இன்றித்தானே*
*நிலவுசீர் அமலனாகி நின்றனன் நீங்கா தெங்கும்"*

*(சிவஞான சித்தியார் – 91)*

என சித்தாந்த சாஸ்திரங்கள் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளன. மெய்கண்ட சாஸ்திரங்களின் காலத்திற்கு நான்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட நாயன்மாரின் அருட்பாடல்களில் இச்சித்தாந்த சிந்தனைகள் தெளிவாக அடையாளங் காணப்படுகின்றன.

*"ஈறாய் முதல் ஒன்றாய் இரு பெண் ஆண் குணம் மூன்றாய்*

..............................................

*வேறாய் உடன் ஆனான் இடம் வீழிம்மிழலையே" (169)*

என்பது சம்பந்தர் தேவாரம்.

*"வானாகி மண்ணாகி"* என வருகின்ற திருவாசகத்தில்
*"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி"*
என்பதனால் ஒன்றாதலும்,

*"உண்மையுமாய் இன்மையுமாய்"*
என்றதனால் உடனாதலும்,

*"கோனாகி யான் எனது என்று அவர் அவரைக் கூத்தாடுவான் ஆகி"* என்றதனால் வேறாதலும் ஆகிய பதியின் மூவகை நிலைகளும் உணர்த்தப் பெற்றிருத்தலைக் காணலாம்.

## சொரூப இலக்கணம்

பதியின் சிறப்பிலக்கணம் இதுவாகும். சொரூபநிலையில் பதியானது சுத்தசிவம், பரமசிவம், சொரூபசிவம் எனச் சுட்டப்படுகிறது. இந்நிலையையே "அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன் ஒன்றிலும் தோய்வின்றித் தானே சுயம்பிரகாசமாய் தன் உண்மையில் நிற்கும் நிலை" எனச் சிவஞானமுனிவர் விதந்துரைப்பார். சொரூபநிலையிற் பதியானது முத்திறமேனிகளைக் கடந்ததாய், மலசம்பந்தமற்றதாய், குணங் குறிகளுக்கு அப்பாற்பட்டதாய், சலனமற்றதாய் அளவைகளால் அறியமுடியாததாய் விளங்கும். இதனையே,

*"பதிபரமேயதுதான்......*
*நிலவும் அருஉருவின்றிக் குணங்குறிகளின்றி*
*நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி*
*அலகிலுயிர்க் குணர்வாகி அசலமாகி*
*அகண்டிதமாய் ஆனந்த உருவாய் அன்றிச்*
*செலவரிதாய் செல்கதியாய் சிறிதாய் பெரிதாய்*
*திகழ்வது தற்சிவம்"*

எனச் சிவப்பிரகாசமும்,

*"பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின்*
*அருமைக்கும் ஒப்பின்மையான்"*

எனத் திருவருட்பயனும் சித்திரித்துள்ளன.

இக் கருத்தமைவையே

*'இன்னவுரு இன்னிறமென் றறிவதே லரிது'*

எனவும்,

*"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்*
*சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் சோதி" (3376)*

எனவும் அறிவாராய்ச்சியியலுக்கு அப்பாற்பட்ட சொரூப சிவத்தினை திருஞானசம்பந்தர் வர்ணிக்கிறார். இதனையே,

*"........... ஒப்புடையனல்லன் ஒருவனல்லன்..........*
*இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்*
*இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" (7203)*

என்கிறார் திருநாவுக்கரசர்.

இதனையே மணிவாசகரும்,

*"சொற்பதங்கடந்த தொல்லோன் காண்க*
*சிந்தையும் செல்லா சேட்சியன் காண்க" (திருவண்டப்பகுதி ; 40,41)*
என்கிறார். மெய்கண்ட சாஸ்திரங்கள் சுட்டியது போலவே தேவாரமுதலிகளும் சொரூப நிலையை விவரிப்பதற்கு எதிர்மறை உத்தியினைக் கையாண்டிருப்பதும் இங்கே கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.

## தடத்த நிலை

தடத்தநிலையே பதியின் பொதுஇலக்கணம் எனப்படுகிறது. சொரூப நிலையில் தன்னையே நோக்கி நிற்கும் பரமசிவம் அந்நிலையினின்றும் நீங்கி உலகத்தை நோக்கும்போது தனது சிறப்பியல்புகளில் ஒன்றாகிய பெருங்கருணை காரணமாக உயிர்களுக்காகத் தானே தனது ஆற்றலைக் (சக்தி) கொண்டு பல்வேறு திருமேனிகளைக் கொள்ளும்.

*"நாடரிய கருணைத் திருஉருவமாகி*
*நவின்று பல்கலை நாத விந்துவாகி........" (சிவப்பிரகாசம்)*

சொரூப நிலையில் ஒடுங்கியிருக்கும் சக்தி தத்துவம், தடத்த நிலையில் வெளிப்பட்டு முதன்மை பெற்று நிற்கும்.

"பலப் பல வேடமாகும் பரன் நாரி பாகன்" (2396)
எனச் சக்தியைப் பொருந்தித் தடத்த நிலையில் பதியானவர் கொள்ளும் வேடங்கள் (வடிவங்கள்) பற்றித் திருஞானசம்பந்தர் கூறியுள்ளார்.

## மூவகைத் திருமேனிகளும் நவபேதங்களும்

தடத்த நிலையில் உயிர்கள்மேற் கொண்ட கருணைமேலீட்டால் பதியானது தனது முச்சக்திகளைப் பொருந்தி மூவகைத் திருமேனிகளைக் கொள்கின்றது. அவையாவன :

1. அருவத்திருமேனி (நிஷ்களம்)
2. உருவத்திருமேனி (சகளம்)
3. அருஉருவத்திருமேனி (நிஷ்களசகளம்)

இதனையே,

*"................. பிறங்கிய நிஷ்கள சகளப் பெற்றியாமே"*
எனச் சிவப்பிரகாசமும்,

*"அகளமாய் யாவரும் அறிவரிது அப் பொருள்*
*சகளமாய் வந்தது"*

எனத் திருவுந்தியாரும்,

*"அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்*
*உருவும் உடையான் உளன்"*

எனத் திருவருட்பயனும் எடுத்துக்காட்டியுள்ளன. இதனை நாயன்மார்களும் தமது அருட் பாசுரங்களில் பல்வேறு வகையாக குறிப்பிட்டிருக்கின்றனர்.

*"பேணு மூன்று உருவாகி பேருலகம்*
*படைத்தளிக்கும் பெருமான்"*

என்கிற திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல் இதற்குப் பொருத்தப்பாடு உடையது. இதனையே,

*"உருமூன்றுமாகி உணர்வரிதாம் ஒருவனுமே*
*புரம் மூன்றும் எரித்தவா பூவல்லி கொய்யாமோ" (திருப்பூவல்–6)*

என்கிறார் மணிவாசகர்.

மூவகைத் தடத்த திருமேனிகளுக்கும் நவபேதங்கள் உபகாரமாகக் கூறப்படுகின்றன. அந்த வகையில்,

| | | |
|---|---|---|
| அருவத்திருமேனி | : | சிவம், சக்தி, நாதம், விந்து |
| உருவத்திருமேனி | : | பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன் |
| அருஉருவத்திருமேனி | : | சதாசிவன் |

இதனையே,

*"சிவம் சக்திநாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன்*
*உவந்தருள் உருத்திரன்தான் மாலயன் ஒன்றின் ஒன்றாய்*
*பவந்தரும் அருவம் நாலிங்குருவநான் குபாயம் ஒன்றாய்*
*நவந்தரு பேதம் ஏகநாதனே நடிப்பன் என்பர்"*

என சிவஞானசித்தியார் குறிப்பிடுகிறது. இதனையே மணிவாசகரும்,

*"ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம்*
*திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" (திருத்தெள்ளேணம்)*

என்கிறார்.

குணாதீதனான சிவன் தடத்தநிலையில் எண்குணங்களைக் கொள்வாரெனச் சித்தாந்திகள் கருதுவர். தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினின்று நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை ஆகியனவே அவ்வெட்டுமாம். இதனை நாயன்மார்களும் அன்றே தமது அருட்பாடல்களில் அடையாளங் காட்டியுள்ளனர். எடுத்துக்காட்டாக,

*"எட்டுக் கொலாம் அவர் ஈறில் பெருங் குணத்தான்" (4342)*
*"எட்டுவான் குணத்தீசன் எம்மான் தன்னை" (6109)*
எனத் திருநாவுக்கரசு சுவாமிகளும்,

*"இரும்புயர்த்த மூவிலைய சூலத்தினானை*
*இறையவனை மறையவனை எண்குணத்தினானை (7630)*
எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பாடியிருப்பது நயக்கத்தக்கதாகும்.

## சக்தி தத்துவமும் பஞ்ச கிருத்தியமும்

ஆன்மாக்கள் கன்மவினைகளை அனுபவித்து விடுதலை பெறுவதற்காகவே தடத்த நிலையில் சக்தி தத்துவத்தைப் பொருந்தி பதியானவர் பஞ்சகிருத்தியங்களை நிகழ்த்துகிறார்.

*"நங்கையினால் நாமனைத்தும் செய்தாற்போல்*
*நாடனைத்தும் நங்கையினால் செய்தழிக்கும் நாயகனும்"*
*(திருக்களிற்றுப்படியார்–78)*

உயிர்கள் கன்ம வினையினை அனுபவித்து ஆன்ம ஈடேற்றம் பெறுவதற்காகத் தனு கரண புவன போகங்கள் சக்தியைப் பொருந்திய பதிப் பொருளால் வெளிக் கொணரப்படுகின்றன. இதனையே,

*"தரைமுதல் உலகினில் உயிர்புணர் தகை மிக*
*விரைமலி குழலுமை யொடு விரவது செய்து" (1331)*
என அர்த்தநாரீ தத்துவமாக சம்பந்தர் விளக்கியிருக்கின்றார். ஆன்மாக்கள் தமது கன்மவினைகளை அனுபவித்தற்பொருட்டு தனுகரண புவனபோகங்களை முதற்காரணமாகிய மாயையிலிருந்து வெளிப்படுத்தலே படைத்தல் ஆகும். வினைப்பயன்களை அனுபவிக்கும்வரை தனுகரணபுவனபோகங்களைப் பாதுகாத்தலே காத்தல் ஆகும். ஆன்மாக்களை போக்கியப் பொருட்களிலே மூழ்கவைத்தலே மறைத்தல் ஆகும். ஆன்மாக்களுக்கு மலபந்தத்தை விலக்கிச் சிவத்துவத்தை விளக்குதலே அருளற்றொழிலின் தாற்பரியமாகும்.

*“அழிப்பிழைப்பாற்றல் ஆக்கம் அவ்வவர் கன்மமெல்லாம்*
*கழித்திட நுகரச் செய்கை காப்பது கன்மவொப்பின்......”*
*(சிவஞானசித்தியார்–57)*

ஐந்தொழில் தத்துவத்தை திருவெம்பாவையில் (20),

*“போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்*
*போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்*
*போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்*
*போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்*
*போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்”*

என மணிவாசகர் கூறியிருப்பது நோக்கத்தக்கது.

### பசு — ஆன்மா

பதியினைப்போன்றே ஆன்மாவும் அநாதியானது என்பது சித்தாந்த முடிவாகும்.

## ஆன்ம இருப்பு நிரூபிக்கப்படுதல்

சைவசித்தாந்திகள் ஆன்ம இருப்பை தர்க்கரீதியாக நிறுவுகின்ற அதேவேளை சூனியவாதிகள், தேகான்மவாதிகள், சூக்கும தேகான்மவாதிகள், இந்திரியவாதிகள், அந்தக்கரணவாதிகள், பிராணான்மவாதிகள், சமுதாய ஆன்மவாதிகள், ஏகான்மவாதிகள் ஆகியோரின் ஆன்மா பற்றிய கருத்து நிலைகளை மறுத்துரைத்து சைவசித்தாந்தக் கருத்தியலை நிறுவியுள்ளனர்.

*“உளதிலதென்றலின் எனதுடல் என்றலின்*
*ஐம்புலனொடுக்கம் அறிதலின் கண்படில்*
*உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்*
*மாயா இயந்திரத் தனுவினுள் ஆன்மா”*

என்ற சிவஞானபோதச் சூத்திரம்(–3) மேற்கூறிய அத்தனை விடயங்களையும் செறித்துரைத்து நிற்கக் காணலாம். அந்த வகையில் ஆன்மா என்பது புறவுடலோ இந்திரியங்களோ பிராணனோ நுண்ணுடலோ அன்று; இவை யாவற்றையும் தனக்குக் கருவிகளாகக் கொண்டு செயற்படும் நித்திய சூக்கும வஸ்து என்பதே சைவ சித்தாந்திகளின் சிந்தனையாகும். இந்த வகையில்,

*“நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்*
*...................... நடலையல்லோம்” (7205)*

எனத் தாண்டகவேந்தர் கூறியிருப்பதும் ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும்.

## சதசத்து

பதி அறிவே சொரூபமானது; இயல்பாகவே அறிவது. ஆன்மாக்களோ அறிவு, தொழிற் கருவிகளை முதல்வன் வழங்கி அறிவிக்க அறியும் தன்மையுடையன. இதனை,

*"அறிந்திடும் ஆன்மா ஒன்றை ஒன்றினாலறிதலானும்*
*அறிந்திடும் அறிவன் அன்றாம் அறிவிக்கஅறிவனன்றே"*

என்கிறது சிவஞானசித்தியார். இதனையே திருநாவுக்கரசரும் தன்னுணர்வு நிலையில் நின்று

*"உன்னைப் போல் என்னைப்பாவிக்க மாட்டேன்"*

எனப் பாடியுள்ளமை நோக்கத்தக்கதாகும்.

அறிவித்தாலன்றி அறியாத ஜென்மங்களாகிய ஆன்மாக்களின் இயல்பினையே

*"ஆட்டுவித்தால் ஆர்ஒருவர் ஆடாதாரே*
*................ ....................................*
*காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே" (7175)*

என மேலும் அவர் விளக்கியுள்ளார்.

ஆன்மாக்கள் வினைப்பயனைக் கழிப்பதற்காகவே பிறவிகளை எடுக்கின்றன. முட்டை, வியர்வை, வித்து, கருப்பை எனும் நான்கு வகைகளில் எண்பத்துநான்குநூறாயிரம் யோனிபேதங்கள்வரை பிறவிகள் அமைவதாகச் சித்தாந்த சாஸ்திரங்களில் குறிப்புக்கள் உள்ளன.

*"ஏற்றியொரு தொகை அதனில் இயம்புவார்கள் யோனி*
*எண்பத்து நான்கு நூறாயிரமென் றெடுத்தே" (சிவப்பிரகாசம்)*

இதனையே,

*"உரை சேரும் எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேதம்*
*நிரை சேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய் ஆங்காங்கே நின்றானே"*
*(1419)*

என்கிறார் திருஞானசம்பந்தர்.

## பாசம் – பஞ்ச மலங்கள்

சைவசித்தாந்தமானது பாசத்தையும் அநாதியானதாகவே குறிப்பிடுகின்றது. "அறிவினைக் காட்டிய பாசம் அநாதி" எனத் திருமூலரும்

இதனை எடுத்துக்காட்டியுள்ளார். பாசம் என்பது பந்திப்பது. ஆன்மாக்களைப் பந்தித்து உள்ளது பாசம். இது ஆணவம், கன்மம், மாயை என மூன்று வகைப்படும். சித்தாந்திகள் இவற்றை நெல்லிலுள்ள உமிக்கும், தவிடுக்கும், முளைக்கும் ஒப்பிடுவர்.

ஆணவம் – உமி
கன்மம் – முளை
மாயை – தவிடு

இந்த மூன்று வகை மலங்களுடன் மாயேயம், திரோதாயி ஆகிய இரண்டையும் சேர்த்து மலங்களை ஐந்தாகக் கொள்வதும் உண்டு.

*"இம்மலம் மூன்றினோடும்*
*இருமலம் இசைப்பன் இன்னும்........." (சி. சித்தியார். 2–86, 2–87)*

சிவப்பிரகாசமும் பஞ்சமலங்கள் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

*"மோகம்மிக உயிர்கள் தோறும் உடனாய் நிற்கும்*
*மூல ஆணவம் ஒன்று முயங்கி நின்று*
*பாகம்மிக உதவுதிரோதாயி ஒன்று*
*பகர்மாயை ஒன்று படர்கன்மம் ஒன்று*
*தேகமுறு கரணமொடு புவன போகச்*
*செயலாரும் மாமாயத் திரட்சி ஒன்று*
*ஆகமலம் ஐந்தென்பர் ............................" (சிவப்பிரகாசம்–32)*

திருமூலரும்,

*"சிவமாகி ஐவகைத் திண்மலம் செற்றோர்*
*அவமாகார் சித்தர் முத்தாந்தத்து வாழ்வார்.........." (497)*

எனக் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.

இம்மலங்கள் ஆன்மாக்களை மயக்கத்திலாழ்த்தி அவற்றின் சுயரூபத்தை உணரவிடாது தடுத்து பொய்யான பந்தத்தையும் போகத்தையும் உண்டாக்குகின்றன. அறியாமையுள் ஆன்மாக்களை உழலச்செய்கின்றன.

அடங்கன் முறையில் பஞ்ச மலங்கள் பற்றிய எந்த ஒரு குறிப்பும் காணப்படவில்லை. ஆயினும் திருவாசகத்தில் பஞ்ச மலங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

*"குலம் களைந்தாய் களைந்தாய் என்னை*
*குற்றம் கொற்றச் சிலையாம்*
*.............................................*
*மலங்கள் ஐந்தாற் சுழல்வன்*
*தயிரிற்பொரும் மத்துறவே" (நீத்தல் விண்ணப்பம்–29)*

இங்கே தயிரிற் பொருந்தும் மத்தினைப் போல ஐந்து மலங்களால் தான் (ஆன்மா) அலைபட்டு உழல்வதாக விபரித்துள்ளமை நயக்கத்தக்கதாகும்.

## வினையும் ஆன்மாவும்

வினை பற்றியும் வினை நீக்கம் பற்றியும் தேவார முதலிகள் அனேக இடங்களில் குறிப்பிட்டுள்ளனர். அந்த வகையில்,

*"மேலைக்கு வித்துமாகி விளைந்தவை உணவுமாகி......"*
எனச் சித்தியாரில் குறிப்பிடுவதைப் போல மரமும் வித்தும் போல கன்மமும் பிறவியும் பிரவாக அநாதி என்பதனை,

*"விரவிய தீவினை மேலைப்பிறப்பு நீர் கடப்ப"*
எனச் சுந்தரமூர்த்தி நாயனார் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

*"முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன் நின்றான்*
*பின்னைப் பிறப்பு அறுக்கும் பேராளன் – தென்னன்*
*பெருந் துறையில் மேய பெருங் கருணையாளன்*
*வருந்துயரம் நீக்கும் மருந்து" (திருவாசகம் ; திருவெண்பா–4)*
இப்பாடலில் முன்னை வினையிரண்டும் என்ற சொற்றொடர் சஞ்சித பிராரத்துவ வினைகளையும், வரும் துயரம் என்ற சொற்றொடர் மேல் வருவினையாகிய ஆகாமியத்தையும் குறிக்கும் வகையில் அமைவது நயக்கத்தக்கதாகும்.

## ஆன்ம விடுதலையும் விடுதலைக்கான மார்க்கங்களும்

சைவ சித்தாந்தம் ஆன்ம விடுதலைக்குரிய வழிமுறையாக நாற்பாத நெறியினைப் பிரேரிக்கின்றது.

### சரியை

புறத் தொழிலால் சிவனுடைய உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடாகப் பொதுவில் கருதப்படுகின்றது.

*"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்*
*ஆலயந் தானும் அரனெனத் தொழுமே" (சிவஞானபோதம்)*

என மெய்கண்டதேவர் கூறியதைப் போல சிவனடியார் சேவை, ஆலயச்சுற்றுப் புறங்களைத் தூய்மையாக பேணுதல், சமூகத் தொண்டு என்ற விரிந்த பொருளை இது உள்ளடக்கியதாகும்.

*"காவினையிட்டும்*
*குளம் பல தொட்டும் கனிமனத்தாள்" (திருநீலகண்டம் பொது–02)*

என திருஞான சம்பந்தரும்,

*"நித்தலும் எம் பிரானுடைய கோயில் புக்குப்*
*புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்......" (6555)*

என திருநாவுக்கரசரும் இம் மார்க்கம் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

## கிரியை

இறைவனுடைய அருவுருவத் திருமேனியினை நோக்கி அகத்தும் புறத்தும் செய்யும் வழிபாடே கிரியையாகும்.

சற்புத்திர மார்க்கமாகிய இந்நெறியில் வாசனையுடைய மலர்கள், தூப தீபம், திருமஞ்சனம், திருவமுது முதலிய உபசாரங்களுடன் முறைப்படி செய்யப்படும் சிவ வழிபாடு விதித்து உரைக்கப்பட்டுள்ளது.

*"புத்திர மார்க்கம் புகலில் புதிய விரைப்போது*
*புகை ஒளி மஞ்சனம் அமுது முதல் கொண்டைந்து......"*
*(சிவஞானசித்தியார் சுபக்கம்–275)*

இதனை சற்புத்திர நெறியில் நின்றவரான திருஞானசம்பந்தரும்

*"நலமலி தருமறை மொழியொடு நதியுறு புனல்புகை யொளி முதல்*
*மலரவை யொடு வழிபடுதிறல்......" (212)*

எனவும்,

*"பூவார் மலர் கொண்டு அடியார் தொழுவார்" (743)*

எனவும் தனது அருட் பாசுரங்களில் அடையாளங் காட்டியுள்ளார்.

## யோகம்

சிவனின் அருவத் திருமேனியினை நோக்கி அகத்திலே செய்யும் வழிபாடு இதுவாகும்.

புலனடக்கம், மனச்சமநிலை பேணல் என்பதன் வழியாக சித்த விருத்தியை ஒடுக்க வல்ல அட்டாங்க யோக வித்தைகளை உள்ளடக்கிய மார்க்கம் இதுவாகும்.

*"சகமார்க்கம் புலன் ஒடுக்கி தடுத்து வளி இரண்டும்*
*சலிப்பற்று முச்சதுரம் முதல் ஆதாரங்கள்......."*

*(சிவஞானசித்தியார் சுபக்கம்–273)*

இதனையே யோக நெறியில் நின்றவரான சுந்தரரும்

*"எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை" (8036)*

*"நீள நினைந்தடியேன் உனை நித்தலும் கை தொழுவேன்" (7423)*
என வெளிப்படுத்தியுள்ளார்.

## ஞானம்

முத்திற மேனிக்கும் அப்பாலாய் விளங்குகின்ற சச்சிதானந்த சொரூபியை அறிவினால் வழிபடுவது ஞானமார்க்கம் என்பர். ஞான சாதனையின் இயல்பினைக் கூற வந்த சிவஞானசித்தியார் சிவ ஞானமானது பாச ஞானத்தைக் கடந்து பசு ஞான முதிர்ச்சியில் இறைவன் திருவடி ஞானமாகிய பதி ஞானம் கைவரப்பெறுவதாகும் என்கிறது.

*"........... பன்மார்க்கப் பொருள் பலவும் கீழாக மேலாம்*
*பதிபசு பாசம் தெரிந்து பர சிவனைக் காட்டும்*
*நன்மார்க்க ஞானம் ............" (சிவஞான சித்தியார்–274)*

*ஞான நெறியில் நின்றவரான மணிவாசகரும் தமது அனுபவ நிலையினை*

*"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட*
*அத்தன் எனக்கு அருளியவாறு ............" (அச்சோப்பதிகம்–1)*

*"சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால் ........."*

*(சிவபுராணம்–17)*

என வெளிப்படுத்தியுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

## அத்துவித முத்தி

ஆன்மாக்களின் இலட்சியம் மலத் தொடர்பினின்றும் நீங்கி சிவத் தொடர்பு பெறுதலேயாகும். இருவினையொப்பும் மலபரிபாகமும் நிகழ்ந்த

பின்னர் இறை திருவருள் ஆன்மாவில் படிதலாகிய சத்தினி பாதம் நிகழும்.

இவ்வகையில் ஆன்மா சிவத்தில் கலத்தலாகிய சாயுச்சித பேறாகிய அத்துவித முத்தி நிலையையே சைவ சித்தாந்தம் இறுதி இலக்காக கொண்டுள்ளது.

*"ஒன்றாகாமல் இரண்டாகாமல்*
*ஒன்றும் இரண்டும் என்றாகாமல்" (இருபாஇருபஃது)*

நிற்பதாகிய அத்துவித முத்தி நிலையில் கொல்லனின் உலைக்களத் தீயில் செந்தணலாகவே உருமாறிக் காட்சியளிக்கும் இரும்பினைப் போல சிவத்துடன் ஆன்மா அத்துவிதமாய்க் கலந்திருக்கும்.

*"தாடலை போல் கூடிஅவை தான்நிகழா வேற்றின்பக்*
*கூடலைநீ ஏகமெனக் கொள்" (திருவருட்பயன்–74)*

என உமாபதி சிவாச்சாரியார் தாடலை என்ற சொல்லின் புணர்ப்பு முறை பற்றி அத்துவித முத்தி நிலையினை விளக்குகின்றார்.

இதே தாள் – தலை வழிநிலையிலேயே திருநாவுக்கரசரும்

*"தன்னை மறந்தாள் தான் நாமம் கெட்டாள்*
*தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே" (6501)*

என பசு–பதி ஐக்கியத்தை (அத்துவித நிலையினை) நாயகன் – நாயகி பாவனையில் எடுத்துக் காட்டியிருப்பது நயக்கத்தக்கதாகும்.

இவ்வகையில் நாயன்மார்களின் அருட்பாசுரங்கள் பக்தி யிலக்கியங்களாகப் பொதுவில் அடையாளங்காணப்படினும் அவை மெய்கண்டசாத்திரங்களிற்கும் பண்டாரசாத்திரங்களிற்கும் முன்னோடி களாயும், சைவசித்தாந்தக் கருத்தியல்கள் பொதியப்பெற்ற தத்துவார்த்தப் பனுவல்களாயும் திகழ்கின்றன என்பதில் ஐயமில்லை.

## உசாவியவை

1. ஞானசம்பந்தன், அ,ச, (பதிப்பு) அடங்கன் முறை தேவாரத்திருப்பதிகங்கள் கங்கை புத்தக நிலையம், சென்னை, 1999.
2. இரத்தினசபாபதி. வை., திருமறைத்தெளிவே சிவஞானபோதம் இராதாகிருஷ்ணன் மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம் சென்னைப் பல்கலைக்கழகம். 1979.

3. இராமநாதன் க., சைவசித்தாந்த மெய்ப்பொருளியல்
காா்த்திகேயன் பிறைவேற் லிமிட்டற், கொழும்பு, 1997.
4. இராமநாதன், க, வேதபாரம்பரியமும் சைவசித்தாந்தமும்
ஸ்ரீ ரங்கா பிறின்ரர்ஸ், மதுரை, 1992.
5. குணபாலசிங்கம் தனபாக்கியம், சைவசித்தாந்தமும் விஞ்ஞான உலகமும்
சென் ஜோசப் கத்தோலிக்க அச்சகம், 1990.
6. சுப்பரெட்டியார். ந, சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம்,
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2004.
7. சிவஞானசுவாமிகள், சிவஞானபோதச்சிற்றுரை
சைவசித்தாந்த மகாசமாஜம், சென்னை, 1940.
8. தகாரே. க.வா, சைவதத்துவம்
அல்லயன்ஸ் கம்பனி, சென்னை, 1990.
9. திருவிளங்கதேசிகர். மு, சிவஞானசித்தியார் புத்துரை (சுபக்கம்),
கூட்டுறவு தமிழ்நூற்பதிப்பகம், யாழ்ப்பாணம் 1971.
10. தேவசேனாதிபதி. வ.ஆ, சைவசித்தாந்த அடிப்படைகள்
சென்னைப் பல்கலைக்கழகம், 1982.
11. ஞானகுமாரன். நா சைவசித்தாந்த தெளிவு,
செல்வம் வெளியீடு, பருத்தித்துறை, 1984.
12. முத்துராமன், சைவசித்தாந்தம்,
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1975.
13. மெய்கண்டசாத்திரம் பதினான்கு (இருபகுதிகள்)
கழகவெளியீடு,1969.
14. Siddalingaiah, T.B, **Origin and Development of Saiva Siddhantha Upto 14th Century,** Nepolean Press, Madurai, 1979.